**பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!**

***கிழமை இல. 39-2021***

**பெற்றோர்குழு 2021 - 2022**

25.09.2021 வகுப்புப்பிரதிநிதிகள் கூட்டத்தில் பெற்றோர்குழுவினர் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

- பொறுப்பு: திரு. துராதரன்(சுரேஷ்) கணேசமூர்த்தி (7ம் வகுப்புப் பிரதிநிதி)
- செயலாளர்: திரு. கேதீஸ்வரன(ராஜா) சரவணை (8ம் வகுப்பு உதவிப்பிரதிநிதி)
- கணக்காளர்: திரு. நந்தகுமார் ஜெயபாண்டியன் (3ம் வகுப்புப் பிரதிநிதி)

*பெற்றோர்களுக்கும் வகுப்புப்பிரதிநிதிகளுக்கும் தொடர்பாடலுக்கான வைபர் குழுமம் உருவாக்கப்பட்டுள்ளது. அனைவரும் தங்கள் பிள்ளைகளின் வகுப்புக்குரிய குழுமங்களில் மட்டும் இணைந்துகொள்ளவும்.*

**02.10.2021 - சனிக்கிழமை - *கல்வி - கலைவகுப்புகள்***

ஓசன் பாடசாலையில் தொடர்ந்தும் ஓசன் பாடசாலை எமக்கு விதிக்கப்பட்ட விதிகளுக்கமைய நேரடியாக வழங்கப்பட்ட நேரத்தில் நடைபெறும்.

- அனுமதி இன்றி எந்தப் பெற்றோரும் பாடசாலைக் கட்டிடத்தினுள் நுழைவதைத் தவிர்க்கவும்.

*தமிழ் மொழித் தேர்வுக்கான தயார்படுத்தல் வகுப்புகள் 02.10.2021 நேரம் 12:30-14:30 ஓசன் பாடசாலையில் நடைபெறும். அன்றைய வகுப்பின் பொறுப்பாசிரியராக ஆசிரியை. ஷஹானா சதானந்தன் அவர்கள்.*

**கலை**

நவராத்திரி விழா 16.10.2021 சனிக்கிழமை அன்று நடைபெறும். முழுவிபரங்கள் அடுத்த வாராந்தத் தகவலினூடாக அறிவிக்கப்படும்.

1. தங்கள் குழந்தைகளுக்கு ஏடுதொடக்கவோ அல்லது சிறுவர் வகுப்பில் இணைக்கவோ விரும்பினால் முன்கூட்டியே பதியவும்.
2. அன்று கலைவகுப்புகளில் புதிதாக இணையவிரும்புவபர்கள் 10.10.2021இற்கு முன்னதாக கலைப்பொறுப்பாளருக்குத் தெரிவிக்கவும்.

## நிதி

கட்டணம் சார்பான குறுந்தகவல்கள்(SMS) விரைவில் தங்களுக்கு கிடைக்கும். முடிவுத்திகதிக்கு முன் கட்டணங்களைச் செலுத்தும்படி வேண்டுகின்றோம்.

**கட்டணவிபரம்:**

1. அன்னை உறுப்பினருக்கான கட்டணம் - 100,- (ஒரு மாணவனுக்கு)
2. தவணைக்கட்டணம் - 700,- (ஒரு தவணை மற்றும் மாணவனுக்கு)
3. தமிழர் வள மேம்பாட்டுநிதி - 200,- (ஒரு தவணை மற்றும் மாணவனுக்கு)

ஒரு குடும்பத்திற்கான மொத்தத்தொகை 5000,-.

**குறிப்பு:** வழங்கப்பட்ட தொகையை விட மேலதிகமான தொகையுடன் குறுந்தகவல் கிடைத்தால், அதன் பொருள் கடந்தகாலங்களில் தங்களால் செலுத்தத்தவறிய தொகையும் இணைக்கப்பட்டுள்ளது என்பதே ஆகும். கட்டணம் சார்பான கட்டணப்படிவம் தேவை என தனியாகப் பதிவுசெய்தவர்களுக்கு அப்படிவம் அனுப்பிவைக்கப்படும். மேலதிக விபரம் தேவைப்படின் எம்மைத் தொடர்புகொள்ளவும்.

**ஆசிரியர்களுக்கான கணனிப் பயிற்சிப் பட்டறை பகுதி 2.**

02.10.2021 13.00 - 14.30 ஓசன் பாடசாலையில் நடைபெறும்.
ஆசிரியர்: திரு. சண்முகதாஸ் ஆசைப்பிள்ளை அவர்கள்.

**பெற்றோர்கூட்டம் 10.10.2021 நேரம் 17.00-19.00(ஆகக் கூடியது 19.30)**

பல முக்கியமான தகவல்களுடன் இணையவழியினூடாக நடைபெறும். தங்களுக்கான கூட்ட அழைப்பினை அனைத்து வகுப்பு வைபர்குழுமங்களிலும் அனுப்பிவைக்கப்படும். அதனை அழுத்தி தங்கள் தனிப்பட்ட அல்லது பிள்ளைகளின் மின்னஞ்சலைப் பயன்படுத்தி கூட்டத்தில் இணையலாம். இக்கூட்டத்திற்கு ஆசிரியர்களையும் வரவேற்றுக்கொள்கின்றோம்.

கிழமை இல. 40-2021 அதாவது 09.10.2021 சனிக்கிழமை அன்று இலையுதிர்கால விடுமுறையாக அறிவிக்கின்றோம்.

- இனிவரும் காலங்களில் அன்னை லோறன்ஸ்கூக் வளாகத்தின் மின்னஞ்சல் lorenskog@annai.no மற்றும் தொலைபேசி இலக்கம் 91875537

*எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.*

நன்றி!

நிர்வாகம்
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்

**நாம் தமிழர்!**

**தமிழை வளர்க்கப் பணிபுரிவோம்!**